**<u>சுருக்கம்</u>**

திண்டுக்கல் மாவட்டம் – சித்தரேவு கிராமம் – தாண்டிக்குடி மலைச்சாலை கி.மீ 0.2 இல் அமைந்துள்ள சாலை – சுங்கம் வசூல் செய்வதை நிறுத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (எச்எஸ்1) துறை

அரசாணை (நிலை) எண். 107 நாள்: 6-7-06

**<u>படிக்க</u>**

1) அரசாணை (நிலை) எண். 1407 பொதுப் பணித் துறை, நாள் 20–4–1954
2) அரசாணை (நிலை) எண். 769, பொதுப் பணித்துறை நாள் 13–3–1965
3) அரசாணை (நிலை) எண். 1446 பொதுப் பணித்துறை நாள் 19.5.1965.

**<u>மீண்டும் படிக்கவும்</u>**

4) சி.ஆ . ம. நி நிர்வாக ஆணையரின் கடித எண். ஆ.ர் 3/52270/90 நாள் 26/8/1991.
5) தலைமைப் பொறியாளர் (பொது) , நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கடித எண். 34104/பாலம் 3/92.7 நாள் 20.10.92 மற்றும் 11.7.2003.
6) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண். 67745/2003/பி1நாள் 1/9/04 மற்றும் 2.11.2005.

**<u>ஆணை:</u>**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் திண்டுக்கல் மாவட்டம், தாண்டிக்குடி மலைச்சாலை அ.பிவிருத்திக்கு ரூபாய். 3,64,200/– அனுமதி வழங்கப்பட்டது. அச்செலவினத்தினை 4 1/4 % வட்டியுடன் மீளப் பெறுவதற்காக இச்சாலையில் சுங்கம் வசூலிக்க ஆணையிடப்பட்டது. பார்வை 2 ல் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட சாலையில் சுங்கம் வசூலிப்பதை நிறுத்தலாம் என ஆணையிடப்பட்டது. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மீண்டும் சுங்கம் வசூலிப்பதற்கு ஆணையிடப்பட்டது.

2. பார்வை 4 ,இல் படிக்கப்பட்ட கடிதத்தில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் , திண்டுக்கல் மாவட்டம், தாண்டிக்குடி சித்தரேவு மலைச்சாலையில் நிர்மாணிக்கப்பட்ட செலவினத்தை ஈடு செய்த பின்னர், இச்சாலையில் சுங்கம் வசூலிப்பதை நிறுத்தம் செய்வதற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணை வேண்டியுள்ளதாகத் தெரிவித்து சாலை

நிர்மாணிக்கப்பட்ட செலவினத்தை ஈடு செய்த பின்னரும் சுங்கம் வசூலிப்பதை தொடரலாமா என்பதற்கு தெளிவுரை வேண்டினார்.

3. தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் தமது கடிதத்தில் இச்சாலையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட தொகை வட்டியுடன் கணக்கிட்டால் ரூ. 6,81,638/– ஏற்பட்டுள்ளது என்றும், இப்பாலத்தில் 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ரூ. 8,71,594/– சுங்கம் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து.ள்ளார். இச்சாலை நிர்மாணிக்கப்பட்ட செலவினமான ரூ. 6,81,638/–விட கூடுதலாக சுங்கம் வசூல் செய்யப்பட்டுள்ளதால், இச்சாலையில் சுங்கம் வசூல் செய்வதை நிறுத்தி விடலாம் எனவும் தெரிவித்து.ள்ளார்.

4. இச்சாலையினைப் பராமரிக்கவும், சீரமைக்கவும் 1980–81 ஆண்டு முதல் 2000–01 வரை ரூ. 88,67,525 செலவிடப்பட்டுள்ளதாக தலைமைப் பொறியாளர் தெரிவித்ததின் அடிப்படையிலும், மேலும் 2001–02 ஆண்டு ரூ. 15,935/– சுங்க வசூல் செய்வதற்காக பணியாளர் செலவினமாக ரூ.1,32,000/– செலவிடப்பட்டுள்ளதாலும் மற்றும் பராமரிப்பு செலவினம் ரூ. 15,47,000 /– ஏற்பட்டுள்ளதாலும் ,இதை ஈடு செய்வதற்கு சுங்க கட்டணம் வசூலிப்பதை அறவே நிறுத்துவதை காட்டிலும், தனியாருக்கு சுங்கத் தீர்வை வசூல் செய்ய ஏலம் விட்டால் அதன் மூலமாக அரசின் நிர்வாக செலவை தவிர்க்க முடியும் எனக் கருதப்பட்டு, அதிக செலவில்லாமல் சுங்க கட்டணத்தை ஏலம் மூலம் பெற வழியுள்ளதா என மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம் கேட்டுக்கொள்ளப்பட்டார். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது கடிதத்தில், 24.10.2005 முதல் 31.10.2005 வரை இச்சாலையில் முன்னாள் படைவீரர்களைக் கொண்டு நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சோதனை அடிப்படையில் சுங்கம் வசூல் செய்ய முடிவு செய்து, தற்காலிகமாக உயர்த்தப்பட்ட கட்டண விகிதத்தில் சுங்கம் வசூலிக்கப்பட்டதாகவும், அதன்படி சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ.900/– மட்டும் வசூலாகியுள்ளது எனவும் தெரிவித்து.ள்ளார். இதனை கணக்கிட்டால் மாத வருவாய் ரூ.27,000/– கிடைக்க வாய்ப்புள்ளது எனவும், ஆனால் இப்பணிக்கு 6 முன்னாள் படைவீரர்களை சுழற்சி முறையில் நியமனம் செய்தால் மாதம் ரூ.30,000/– வரை சம்பளம் அளிக்க வேண்டியுள்ளது எனவும், மேலும் வசூல் தொடர்பான இரசீதுகள், கணக்குப்பதிவேடுகள் போன்றவைகளை தயார்செய்யும் வகையிலும் கூடுதல் செலவிற்கு வாய்ப்புள்ளது எனவும், இதனால் அரசுக்கு வருவாயைக் காட்டிலும் கூடுதலாக

செலவாகும் வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்து.ள்ளார். மேலும், சுங்க வரி விகிதத்தை உயர்த்தினால், இச்சாலையை பயன்படுத்தும் சாதாரண மக்கள் பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளது என்பதால், இச்சாலையில் சுங்கவரி வசூலித்தலை நிறுத்தம் செய்யலாம் எனவும் தெரிவித்து.ள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலனை செய்த பின் . அவர்களின் பரிந்துரையை ஏற்று திண்டுக்கல் மாவட்டம் , சித்தரேவு கிராமம் தாண்டிக்குடி மலைச்சாலை கி.மீ 0/2ல் உள்ள பாலத்தில் சுங்கவரி வசூல் செய்வதை நிறுத்தி வைத்து அரசு ஆணையிடுகிறது.

6. மேற்கண்ட பாலத்தில் சுங்கவரி வசூல் செய்வதை நிறுத்தி வைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்த.ப்படுகிறார்.

7. நிதித் துறையின் ஒப்புதலுக்கு பிறகு ஆணை வெளியிடப்படுகிறது. அ.சா.கு எண்.85376/PW1/06 நாள் 2–3–2006.

/ ஆளுநரின் ஆணைப்படி/

கா. அலாவுதீன்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாவட்ட ஆட்சியர், ,திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, சென்னை –5
சிறப்பு ஆணையர், மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை –5
மாநில கணக்காயர், சென்னை –18

**நகல்**
நிதித்துறை, சென்னை –9
உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.